**2026 ஜனவரி மாதம் 28– ஆம் தேதி புதன்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**எம் .சி .ஓ .பி. நெம்பர் : 67/2022**

MCOP No.: 67/2022 – சுருளிக்குமார் PW1 28.01.2026

த/பெ.நாகையா

**சாட்சி அழைக்கப்பட்டு, 3 ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விபத்து குறித்த சங்கதிகளை யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் எனது மருமகன் கூறி எனக்கு தெரியும். விபத்தை எனது மருமகன் நேரடியாக பார்த்தாரா என்றால் பார்த்தார், அவர் பெயர் அன்பழகன் ஆகும். போலீசில் அவர் தான்புகார் கொடுத்தார் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். விபத்து நடந்த சாலை தேனி–பெரியகுளம் தென்வடல் சாலை என்றால் சரிதான். தென்வடல் சாலையில் தேனி–அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்திற்கு எதிரே உள்ள தாரா வாட்டர் சர்வீஸ் கடைக்கு அருகில் நடந்தது என்றால் சரிதான்.

2. TN 60 AE 0136 என்ற பதிவு எண்கொண்ட ஆக்டிவா வாகனத்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி ஓட்டி வந்தார் என்றால் பெரியகுளத்திலிருந்து தேனி நோக்கி சென்றார். வடக்கிலிருந்து தெற்கு நோக்கி ஓட்டிச்சென்றார் என்றால் திசை ஞாபகமில்லை. பெரியகுளத்திலிருந்து தேனிக்கு வரும் வாகனங்களுக்கு இடதுப் பக்கம் என்பது அதன் கிழக்குப் பக்கம் உள்ள தேனி நகராட்சி அலுவலக பகுதி தான் இடதுப் பக்கம் என்றால் சரிதான்.

3. விபத்து இறந்துபோன எனது தாயார் தமிழரசி என்பவர் தேனி நகராட்சி அலுவலகத்தில் துப்புரவு தொழில் செய்து முடித்துவிட்டு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சாலையை கடக்கும்போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். எனது தாயார் சாலையிலிருந்து வரும் வாகனங்களை சரியாக கவனிக்காமல் சாலையை திடீரென்று கடக்க முயற்சித்தப்போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது தாயாரின் கவனக்குறைவு காரணம் என்றால் சரியல்ல.

4. விபத்து சமயத்தில் இருச்சக்கர வாகன ஓட்டுநர் சாலை விதிகளை பின்பற்றி சரியாக வாகனத்தை ஓட்டிவந்தார் என்றால் சரியல்ல. எனது தாயார் அடிப்பட்ட உடன் எந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் என்றால் தேனி, கிருஷ்ணம்மாள் மருத்துவமனைக்கும், அதன்பின்னர் தேனி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கும், அதன்பின்னர் மதுரை அரசு மருத்துவமனைக்கும் அழைத்துச் செல்லப்பட்டார். எந்த தேதியில் எனது தாயார் மதுரை அரசு மருத்துவமனையிலிருந்து சிகிச்சையை முடித்து விடுவிக்கப்பட்டார் என்றால் 27.01.2022ம் தேதி விடுவிக்கப்பட்டார், சாட்சி மீண்டும் 26.01.2022ம் தேதி விடுவிக்கப்பட்டதாக கூறுகிறார்.

5. கிருஷ்ணம்மாள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தேனி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு எனது தாயாரை அழைத்துச் சென்று சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.8-ன்படி எனது தாயார் எந்த தேதியில் மதுரை அரசு

மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. எனது தாயார் எந்த தேதியில் இறந்தார் என்றால் 27.02.2022 ஆகும். ம.சா.ஆ.8 ன்படி எனது தாயார் 01.02.2022 ம் தேதியில் மதுரை அரசு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. எனது தாயார் எந்த இடத்தில் இருந்தபோது இறந்தார் என்றால் வீட்டில் இருக்கும்போது இறந்தார். ம.சா.ஆ.8–ன்படி மறுபரிசோதனைக்கு மருத்துவமனைக்கு 2 நாட்கள் கழித்து வரச்சொல்லியிருந்தார்கள் என்றால் சரிதான், அவ்வாறு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேனா என்றால் இல்லை. 27.02.2022 ம் தேதி எனது தாயார் இறந்த பிறகு பிரேத பரிசோதனை செய்தோமா என்றால் இல்லை. பிரேத பரிசோதனை செய்தால் தான் எனது தாயார் இறந்ததற்கான காரணம் தெரியவரும் என்றால் வீட்டில் இறந்தார், விபத்து ஏற்பட்டதால் தான் இறந்தார்.

7. எனது தாயார் இறக்கும்போது அவருக்கு வயது என்ன இருக்கும் என்றால் 58 இருக்கும். எனது தாயாருக்கு இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் ஆகியவை இருந்தன என்றால் தவறு. விபத்தில் எனது தாயாருக்கு எந்த பகுதியில் அதிகமான காயங்கள் ஏற்பட்டன என்றால் தலையில் ஏற்பட்டது. மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலிருந்து முழு குணமடைந்து தான் எனது தாயார் விடுவிக்கப்பட்டார் என்றால் வீட்டிற்கு வந்த பின்பும் அவருக்கு உடல்நிலையில் தொந்தரவு இருந்தது. எனது தாயார் தேனி–அல்லிநகரம் நகராட்சியில் துப்புரவு தொழிலாளியாக வேலை பார்த்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

8. வழக்கிற்காக பொய்யாக எனது தாயார் துப்புரவு தொழிலாளியாக வேலை செய்தார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்தில் ஈடுப்பட்டதாக சொல்லப்படும் இருச்சக்கர வாகனத்தை 2வது எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் வாகனத்திற்கு மட்டுமே காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. இருச்சக்கர வாகனத்திற்கு 3ம் நபருக்கான காப்பீடு 4ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் தான் காப்பீடு செய்யப்பட்டு நிலுவையில் இருக்கும் விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இழப்பீடு கோர வேண்டும் என்றால் 1, 2 4 எதிர்மனுதாரர்களிடமிருந்து தான் பெற முடியும் என்றாலும், 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றாலும், எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

<u>1, 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –

1, 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 28.01.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.01.28 17:19:34 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
28.01.2026